# தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் : பிரதிநிதித்துவம் குறித்த ஓர் பார்வை

விஜயதர்சினி விஜயகுமார்,[1] கிருத்திகா தருமராஜா,[2] சிவசுப்பிரமணியம் ரகுராம்[3]

[1]ஊடகக்கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
[2]ஊடகப் பயிற்சி நிறுவனம்
[3]ஊடகக் கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*thivijathinesh@gmail.com[1] kiruththiraja@yahoo.com[2] ragunadu2003@yahoo.com[3]*

**ஆய்வுச்சுருகம்** – சமூகத்தில் பொதுவில் ஆண், பெண் பாலின வேறுபாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் அப்பாலின வேறுபாடுகளையும் கடந்து மூன்றாம் பாலினம் குறித்த சிந்தனைகள் இன்று பேசுபொருளாக கருக்கொள்ள ஆரம்பித்துள்ளதுடன் அவை முன்னரைப் போலல்லாது, முரண்பாடான சமூக இருப்புக்குரியனவாக அல்லாது, இசைவான சமூக அங்கீகாரத்தையும் பெற்றுவருகின்றன. உலக நாடுகள் பலவற்றிலும் அங்கீகரிக்கப்பட்டு வருகின்ற திருநங்கைகள் குறித்து உள்ளூர் சமூகத்தில் பல்வேறு விதமான எண்ணப்பாடுகளை, கருத்தியல்களை திரைப்படங்கள் ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலையில், மக்களின் கருத்தியல்களில் செல்வாக்குச் செலுத்தும் வலுவான ஊடகமாகக் கருதப்படக்கூடிய திரைப்படங்களில் மூன்றாம் பாலினத்தவர் அதிலும் குறிப்பாக, திருநங்கைகளின் பிரதிநிதித்துவம் எவ்வாறு அமைகின்றது என்பதைப் பற்றிய ஊடக அறநெறி சார்ந்த பார்வை குறித்த தேவை இன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்த வகையில், இந்த ஆய்வானது தமிழ்த் திரைப்படங்களில் குறிப்பாக, தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டு வெளிவருகின்ற திரைப்படங்களில் திருநங்கைகள் பிரதிநிதித்துவப்படுத்தும் முறைமையை ஆராய்கின்றது. இங்கு, திருநங்கைகள் குறித்த கதாபாத்திரங்கள் எவ்வாறான சித்திரிப்புக்கள் வழியாக உருவாக்கப்படுகின்றன என்பதுடன், கதாபாத்திர வகிபாகம், உடல்மொழி, குறியீடுகள் என்ற தளங்களில் குறித்த கதாபாத்திரங்களின் தன்மைகளை ஆராய்வதாக இந்த ஆய்வின் நோக்கம் அமைகின்றது. தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த பிரதிநிதித்துவம் – திருநங்கைகளுக்கான காட்சிகளின் எண்ணிக்கை, கதாபாத்திர வகிபாகம், ஆடையமைப்பின் தன்மை, வசனங்கள், உடல்மொழி வெளிப்பாடுகள், குறியீடுகள் என்ற கூறுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. குறித்த ஆய்விற்காக 2006 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையில் வெளிவந்த தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த கதாபாத்திரங்கள் இடம்பெற்ற பதினெட்டுத் திரைப்படங்கள் மாதிரிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. திரைப்படங்களின் உள்ளடக்கம் மற்றும் நேர்காணல்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகள் அளவுசார், பண்பு ரீதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேற்குறித்த பிரதிநிதித்துவ விடயங்கள் அடிப்படையில், தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் திருநங்கைகள் தொடஉபில் எதிஉமறையான தோற்றப்பாட்டைக் கொடுப்பதுடன் திரைப்படங்களில் திருநங்கை கதாபாத்திரங்களின் முக்கியத்துவம் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது ஆய்வின்வழி கண்டறியப்பட்டது. தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த சித்திரிப்புக்களாக இனங்காணப்பட்டவற்றில் நான்கு விடயங்களில் எதிஉமறையானதாகவும் நான்கு விடயங்கள் நேஉமறையானதாகவும் ஆய்வின் இறுதியில் கண்டறியப்பட்டுள்ளன. வசனங்களினூடாக வெளிப்படுத்தப்படும் சித்திரிப்புக்கள், நடத்தை வெளிப்பாடுகள், பின்னணியிசை, ஒளிப்பதிவுசாஉ தொழில்நுட்பங்கள் ஆகியவை ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் திருநங்கை கதாபாத்திரங்களை பெருமளவில் நேஉமறையானதாகச் சித்திரித்துள்ளமையும் கதாபாத்திரத்தின் வகிபாகம், ஆடையமைப்பின் தன்மை, உடல்மொழி வெளிப்பாடுகள், குறியீடுகள் ஆகியன திருநங்கை கதாபாத்திரங்களை பெருமளவில் எதிர்மறையானதாகச் சித்திரித்துள்ளமையும் கண்டறியப்பட்டது.

**திறவுச் சொற்கள்** – தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்கள், திருநங்கைகள், நேஉமறையான பிரதிநிதித்துவம், எதிஉமறையான பிரதிநிதித்துவம்

## I. அறிமுகம்

பொதுவான மனித இனம் ஆண், பெண் என இரண்டு பாலினங்களைக் கொண்டது. எனினும், மனித உடலியல், உளவியல் வேறுபாடுகள் காரணமாக சில மனிதர்களின் பிறப்பு நியதிகள் உடைக்கப்பட்டு மூன்றாம் பாலினத்தவர்கள் உருவாகின்றார்கள். ஆண், பெண் என்ற இருபாலாருக்கும் இடையில் தங்களை மூன்றாவது பாலினமாக அறிவிக்கப் போராடுகின்ற ஒரு குழுவே மூன்றாம் பாலினத்தவராகும். இவ் மூன்றாம் பாலினத்தவர் தவிர சில பால் புதுமையர் பிரிவினரும் உள்ளனர்.

ஆண் ஓரினச் சேர்க்கையாளர் (Gay), பெண் ஓரினச் சேர்க்கையாளர் (Lesbians), இருபால் சேர்க்கையாளர் (டீளைநஒரயட), பால் நடுநர் (Androgyny), KOeu; (Pangender) இருநர் (Bigerder), திரிநர் (Trigender), பாலிலி(Agender), திரு நடுநர் (Neutras) இடையினம் (Injtergender), பிறப்பால் உடையணியும் ஆண் (Cross dresser male), பிறப்பால் உடையணியும் பெண் (Cross dresser female), பிறப்பால் உடையணியும் திருநர் (Trans cross dresser) என்ற இத்தகைய பால்புதுமையர்களிலிருந்து வேறுபட்டவர்களாக மூன்றாம் பாலினத்தவர்களான திருநம்பிகள், திருநங்கைகள் கருதப்படுகின்றார்கள். இவ் ஆய்விலே மூன்றாம் பாலினத்தவர்களில் திருநங்கைகள் மாத்திரமே எடுத்துக் கொள்ளப் படுகின்றனர்.

திருநங்கைத்துவம் என்ற சொல்லை முதன்முறையாக ஜேர்மனிய பாலியல் ஆய்வாளரான ‘மக்னஸ் கெர்ச்பெல்ட்’ என்பரே அறிமுகப்படுத்தினார்[1]. உலகம் முழுவதும் சமத்துவம், விடுதலை, சகோதரத்துவம், வேண்டி பல்வேறு போராட்டங்கள்

நடைபெற்றன. இத்தகைய உரிமைகள் வேண்டி 2008 ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி தமிழ்நாட்டில் 'அரவாணிகள் நலவாரியம்' தோற்றுவிக்கப்பட்டது. அதே தினத்தை தமிழக அரசு அரசாணை மூலம் 2011ஆம் ஆண்டு முதல் திருநங்கை தினமாக அறிவித்தது[2].

சைவசமயத்தில் "அர்த்த நாரீஸ்வரர்" கிறிஸ்தவத்தில் 'அண்ணகர்' இஸ்லாமியத்தில் 'முனைதீன்' என திருநங்கைகளின் இருப்பு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மகாபாரதம் மற்றும் திருமந்திரம் ஆகியவற்றிலும் திருநங்கைகள் குறித்து பேசப்பட்டிருக்கின்றது[1]. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே சுமேரிய நாகரிகத்தில் திருநங்கைகள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. அக்கால மக்களின் வீட்டு விழாக்களில் இவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வரலாற்றுச் சான்றுகளைத் தவிர, நவீன சமூகத்தின் மிக முக்கிய தொடர்பாடல் தளமான ஊடகங்களும், திருநங்கைகள் தொடர்பில் கணிசமான பதிவுகளைத் தந்திருக்கின்றன. குறிப்பாக, காட்சி ஊடகமான திரைப்படங்கள் வெகுசனப் பரப்பில் திருநங்கைகளைப் பிரதிநிதித்துவம் செய்வதிலும், மக்களிடையே திருநங்கைகள் பற்றிய பிரதிமைகளை உருவாக்குதிலும் வலுவான தாக்கங்களைச் செலுத்தி வருகின்றன[3].

இந்த வகையில், தென்னிந்தியத் தமிழ் சினிமாவில் திருநங்கைகள் குறித்த பதிவுகள் அதிகளவில் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், திருநம்பிகள் பற்றிய எவ்வித பதிவுகளும் தமிழ் சினிமாவால் பதிவு செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை.

அதிகமான சந்தர்ப்பங்களில் தென்னிந்தியத் தமிழ் சினிமாவில் திருநங்கைகளின் பிரதிநிதித்துவம் கேலிக்குரிய பாத்திரங்களாக அமைந்திருத்தலே பொதுநிலையில் அவதானிக்கப்படுகின்றது.

மாறாக, புறநடையாக திருநங்கைகள் மீது அனுதாபம் கொண்டவர்களாக அவர்களை நேர்மறையான புரிதல்களுடன் காண்பித்த இயக்குநர்களும் உள்ளனர். ஒட்டுமொத்த தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படச் சூழலில் குறைந்தளவு திரைப்படங்களே திருநங்கைகளுக்கு இதுபோன்ற மதிப்பளிக்கும் காட்சிகளை அமைத்துள்ளன.

எவ்வாறாயினும், தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் திருநங்கைகளைப் பிரதி நிதித்துவப்படும் முறைமை தொடர்பில், ஆழமான, பல்துறைசார் அணுகுமுறையுடன் கூடிய ஆய்வு முயற்சிகள் காலத்தின் தேவையாக உள்ளன. இந்த வகையில், தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டு வெளிவருகின்ற திரைப்படங்களில் திருநங்கைகள் பிரதிநிதித்துவப்படுத்தும் முறைமையை இந்த ஆய்வு ஆராய்கின்றது.

### 01. ஆய்வு முறையியல்

காலத்திற்குக் காலம் திருநங்கைகள் தொடர்பில் சமூகத்தில் புரிதல்கள், விழிப்புணர்வுசார் விடயங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் அவ்விடயங்கள் தொடர்பில் அக்கறை கொண்டு, அந்த மாற்றங்களை தமக்கள் உள்வாங்கிக்கொண்டனவா என்பதை நுணுக்கமாக ஆராய வேண்டியுள்ளது.

#### ஆய்வின் நோக்கம்

குறித்த ஆய்வின் பிரதான நோக்கமானது, தற்காலங்களில் சமூகத்தில் அங்கீகாரம் பெற்று வருகின்ற திருநங்கைகளை தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பது தொடர்பில் ஆராய்வதை இலக்காகக் கொண்டது. அந்த வகையில், மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் காட்சிப்புல ஊடகமாகிய சினிமாவிலே ஆண், பெண் என்ற இருபாலாரையும் போன்று திருநங்கைகள் சரியான விதத்தில் பாரபட்சமின்றி வெளிப்படுத்தப்படுகின்றனரா என்பதை அறிவது இந்த ஆய்வின் முனைப்பாக உள்ளது.

#### மாதிரிகள் வடிவமைப்பு

இந்த ஆய்விற்காக திருநங்கைகள் கதாபாத்திரங்கள் இடம்பெற்ற தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் மாத்திரம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இங்கு கதாபாத்திங்கள் எனப்படும்போது, அவை பிரதான மற்றும் துணைக் கதாபாத்திரங்களாகவும், ஆகக் குறைந்தது சில காட்சிகளிலாவது அக்கதாபாத்திரங்கள் வசனங்களைக் கொண்டிருக்க வேண்டும் (Cast – Speaking) என்பது இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

இதை விடுத்து, திரைப்படங்களில் சூழல்சார் பாத்திரங்களாக (Cast – Atmosphere) தோன்றிய அல்லது நடனங்களில் மாத்திரம் இடம்பெற்றவாறான திருநங்கைக் கதாபாத்திரங்களைக் கொண்ட திரைப்படங்கள் மாதிரிகளாகத் தேர்வு பெறவில்லை. 2006 - 2016 ஆண்டு வரையிலான தென்னிந்தியத்

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த பிரதிநிதித்துவம் தொடர்பில் ஈ, சித்திரம் பேசுதடி, சில்லுனு ஒரு காதல், பருத்திவீரன், தெனாவெட்டு, விருதகிரி, இராவணன், வானம், நர்த்தகி, காஞ்சனா, ஆதிபகவன், ஓநாயும ஆட்டுக்குட்டியும், உன் சமையலறையில், ஐ, வாய்மை, இருமுகன், பிச்சைக்காரன், தர்மதுரை ஆகிய பதினெட்டுத் திரைப்படங்கள் மாதிரிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனாலும், ஆய்வுக் காலப்பகுதியான 2006-2016 ஆண்டு வரையிலான திரைப்படங்களில் ‘கருவறைப்பூக்கள்’, ‘நவரஸா’ ஆகிய திரைப்படங்கள் வெகுஜனப் பார்வைக்கு எந்த வகையிலும் கிடைக்கப்பெறவில்லை. இந்திய திரைப்படத் தணிக்கைக் குழுவினரால் அவை தடைசெய்யப்பட்டவையாக உள்ளன. எனவே, ஆய்வாளரால் இவ்விரு திரைப்படங்களும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**ஆய்வின் கருதுகோள்**

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த சித்திரிப்புக்களானவை ஒரு பொதுவெளியில் எதிர்மறையாகவே இடம்பெற்றிருக்கின்றன என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கப்பட்டு எண்சார் மற்றும் பெறுதிசார் ஆய்வுகளின்வழி கருதுகோளை மெய்ப்பிக்க ஆய்வாளர் முயற்சிகளை மேற்கொண்டார்.


**தரவுகள் சேகரிப்பும் பகுப்பாய்வும்**

இந்த ஆய்வுக்கான முதனிலைத் தரவுகளாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திரைப்படங்களுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கக்கூடிய திருநங்கைகள், திருநங்கைகளை முன்வைத்து திரைப்படங்களை இயக்கிய இயக்குநர்கள், திருநங்கைகள் தொடர்பிலான சமூக ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களின் கருத்துக்கள் என பல்வேறு தளங்களில் இயங்கக்கூடிய பத்துப்பேர் வரையிலான ஆளுமைகளின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக, திருநங்கைகள் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

திரைப்படங்களின் உள்ளடக்க ஆய்வைப் பொறுத்தவரையில் திருநங்கைகளின் பிரதிநிதித்துவக் கூறுகளாக அமையும் காட்சிகளின் எண்ணிக்கை, கதாபாத்திர வகிபாகம், ஆடைகளின் தன்மை, வசனங்கள், உடல்மொழி வெளிப்பாடுகள், குறியீடுகள், நடத்தை வெளிப்பாடுகள்,

பின்னணியிசை, ஒளிப்பதிவுசார் தொழில்நுட்பங்கள் ஆகியவை ஆய்வின் அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன.

கருத்துநிலைச் சட்டகம்



### II. கலந்துரையாடலும் ஆய்வுப்பெறுபேறுகளும்

இந்த ஆய்வில் வரைபடம் - 01 இல் காட்டப்படும் கருத்து நிலைச் சட்டகத்திற்கமைவாகவும் அதன் உட்பிரிவிகளினூடாகவும் ஆய்வாளரால் மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட பதினெட்டு தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

**காட்சிகளின் எண்ணிக்கை**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், திருநங்கைகள் தோன்றும் காட்சிகளின் எண்ணிக்கைக்கேற்ப, எண்ணிக்கை அடிப்படையிலான அதிகளவிலான முக்கியத்துவத்தை 61% திரைப்படங்களும், குறைந்தளவிலான முக்கியத்துவத்தை 39% திரைப்படங்களும் கொண்டிருந்தன. இங்கு காட்சி எனப்படுவது குறித்த வெளி மற்றும் காலத்தைக் கொண்டு வரையறை செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், திருநங்கைகள் தோன்றும் காட்சிகளின் எண்ணிக்கை அதிகமானதாக இருந்த திரைப்படங்களில் கூட, அந்தக் கதாபாத்திரங்கள் கதைக்கட்டமைப்பின் அடிப்படையில் உரிய முக்கியத்துவத்தைப் பெறவில்லை என்பது இங்கு அவதானிக்கப்பட்டது.

**கதாபாத்திரத்தின் வகிபாகம்**

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த பிரதிநிதித்துவம் தொடர்பில் திருநங்கைகள் குறித்த ‘கதாபாத்திர வகிபாகம்’ என்ற உள்ளடக்க விடயத்தை அடிப்படையாகக் கொண்டு கல்விகற்ற தொழிலாளர்கள், மனிதாபிமான உணர்வு கொண்டவர்கள் மற்றம் பிற தொழில்கள் ஆகிய கதாபாத்திர வகிபாகங்கள் நேர்மறையான பிரதிநிதித்துவமாகவும், பாலியல் தொழிலாளிகள், அழகுக்கலை நிபுணர்கள் (திரைப்படங்கள் பாலியல்சார் உணர்வுகளின் உத்தியாகவே திருநங்கைகளை அழகுக்கலை நிபுணர்களாக அதிகம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால், திரைப்படங்களை அடிப்படையாக வைத்தே இவ்வகைப்பிரிப்பு மேற்கொள்ளப்பட்டது.), நாயகன் / நாயகி எதிர்நிலை (வில்லன் / வில்லி கதாபாத்திரம்), விளிம்புநிலைத் தொழிலாளர்கள், திரைப்படங்களில் இடம்பெறும் பாடல்களுக்கு மட்டும் நடனமாடுபவர்கள் ஆகியன எதிர்மறையான கதாபாத்திர பிரதிநிதித்துவமாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட திரைப்படங்களின் உள்ளடக்கத்தின்படி, திருநங்கைகளது ‘கதாபாத்திர வகிபாகம்’ தொடர்பில் பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில் நேர்மறையான கதாபாத்திரச் சித்திரிப்புக்கள் 25% உம், எதிர்மறையான கதாபாத்திரச் சித்திரிப்புக்கள் 75% உம் கொண்டிருப்பது அறியப்பட்டது.

**ஆடையமைப்பின் தன்மை**

‘ஆடையமைப்பின் தன்மை’ என்ற அடிப்படையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்து பாலியல் உணர்வைத் தூண்டும் வகையிலான உள்ளூர் பண்பாட்டு ஆடையமைப்பு, பாலியல் உணர்வுகளைத் தூண்டாத வகையிலான உள்ளூர் பண்பாட்டு ஆடையமைப்பு, பாலியல் உணர்வுகளைத் துாண்டும் வகையிலான மேலைத்தேய ஆடையமைப்பு, பாலியல் உணர்வுகளைத் தூண்டாத வகையிலான மேலைத்தேய ஆடையமைப்பு ஆகிய பொதுமைப்படுத்தப்பட்ட ஆடையமைப்பின் வகைப்பாட்டினூடாக ஆடையமைப்பு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. ஆடையமைப்பின் அடிப்படையில் பாலியல் உணர்வுகளைத் தூண்டாத வகையிலான உள்ளூர் பண்பாட்டு ஆடையமைப்பு மற்றும் மேலைத்தேய ஆடையமைப்பு ஆகியன ஆடையமைப்புத் தொடர்பில் நேர்மறையானதாகவும், பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையிலான உள்ளூர் பண்பாட்டு ஆடையமைப்பு மற்றும் மேலைத்தேய ஆடையமைப்பு ஆகியன எதிர்மறையான சித்திரிப்பாகவும் கருத்திற்கொள்ளப்பட்டன. திருநங்கைகள் தொடர்பிலான ஆடையமைப்பின் பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் ரீதியில் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த நேர்மறையான சித்திரிப்புக்களைக் கொண்ட ஆடையமைப்பு 35% உம் எதிர்மறையான ஆடையமைப்பு 65% உம் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

**வசனங்கள்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வசனங்களைக் கொண்ட பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் ரீதியில் நேர்மறையான வசனங்களைக் கொண்ட பிரதிநிதித்துவம் 55% உம் எதிர்மறையான வசனங்களைக் கொண்ட பிரதிநிதித்துவம் 45% கொண்டுள்ளன.

**உடல்மொழி வெளிப்பாடுகள்**

திருநங்கைகளைத் தனித்து அடையாளப்படுத்தாத வகையில் உடல்மொழிகளைக் கொண்ட திரைப்படங்கள் நேர்மறையான பிரதிநிதித்துவமாகவும், திருநங்கைகளை அடையாளப்படுத்தக்கூடிய உடல்மொழிகளான 'வழமைக்கு மாறான விதத்தில் கைகொட்டுதல்', 'ஆண்களைக் கண்டவுடன் மேலாடையைச் சரிப்படுத்தல்', 'கும்மியடித்தல்' 'அசைவான நடை', 'நளினத்துடன் கூடிய தலையசைப்பு' ஆகியன திருநங்கைகள் குறித்த எதிர்மறையான பிரதிநிதித்துவமாகவும், எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இந்தவகையில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட திரைப்படங்களில், திருநங்கைகள் தொடர்பில் பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டினைக் கொண்டு நேர்மறையான உடல்மொழி சார்ந்த பிரதிநிதித்துவம் 14% உம், எதிர்மறையான உடல்மொழி சார்ந்த பிரதிநிதித்துவம் 86% உம் உள்ளமை கண்டறியப்பட்டது.

**குறியீடுகள்**

தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த பிரதிநிதித்துவம் தொடர்பில் குறியீடுகளின் அடிப்படையில், காட்சிகளினூடாக வெளிப்படுத்தப்படும் குறியீடுகள் குறியீட்டுப் பிரதிநிதித்துவமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. நிறங்கள், எண்கள் (காட்சிரீதியாக), கைப்படுத்தப்பட்ட அலங்காரங்கள்சார் ஆகிய குறியீடுகள் எதிர்மறையான பிரதிநிதித்துவமாக ஆராயப்பட்ட அதேவேளை, திருநங்கைகளைத் தனித்து அடையாளப்படுத்தாத வகையிலான குறியீடுகள் நேர்மறையான பிரதிநிதித்துவமாகக் கொள்ளப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட திரைப்படங்களில் பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில், குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு, நேர்மறையான பிரதிநிதித்துவம் 38% உம், எதிர்மறையான பிரதிநிதித்துவம் 62% உம் இருந்தமை கண்டறியப்பட்டது.

**நடத்தை வெளிப்பாடுகள்**

நடத்தை வெளிப்பாடுகள் அடிப்படையில், மதுபானம் அருந்துதல் மற்றும் புகைத்தல், பொருட்களை அபகரித்தல், அழகுரீதியான விடயங்களுக்கு மிகை அல்லது அதீத முக்கியத்துவம் கொடுத்தல் ஆகிய விடயங்கள் எதிர்மறையான பிரதிநிதித்துவமாகவும், ஏனையவர்களை வாழ்த்தி ஆசிர்வதித்தல், உதவுதல், கருணை ஆகிய விடயங்கள் நேர்மறையான பிரதிநிதித்துவமாகவும் வகைப்படுத்தப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட திரைப்படங்களின் திருநங்கைகள் குறித்த நடத்தை வெளிப்பாடுகள் தொடர்பில் பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில், நேர்மறையான நடத்தை வெளிப்பாடுகளைக் கொண்ட திரைப்படங்கள் 55% உம், எதிர்மறையான நடத்தை வெளிப்பாடுகள் கொண்ட திரைப்படங்கள் 45% உம் எனக் கண்டறியப்பட்டது.

**பின்னணி இசை**

சோகத்தை வெளிப்படுத்தும் பின்னணியிசை, நிசப்தம் (நேர்), திரைப்படத்தில் இடம்பெறும் பிரதான பின்னணியிசை, ஏனையவை (நேர்) ஆகியன நேர்மறையான பின்னணியிசைசார் பிரதிநிதித்துவமாகக் கொள்ளப்பட்ட அதேவேளை, பாலியல் உணர்வைத் தூண்டும் பின்னணியிசை, நிசப்தம் (எதிர்), பயங்கர உணர்வை வெளிப்படுத்துபவை, ஏனையவை (எதிர்) ஆகியன எதிர்மறையான பின்னணியிசைசார் பிரதிநிதித்துவமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட திரைப்பட மாதிரிகளின்படி, நேர்மறையான பின்னணியிசை 61% பெறுமானத்தையும், எதிர்மறையான பின்னணியிசை 39% பெறுமானத்தையும் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது.

**ஒளிப்பதிவுசார் தொழில்நுட்ப விடயங்கள்**

ஒளிப்பதிவு சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் படத்துணுக்குகள் (Camera shots), படக்கோணம் (Camera angle), பட நகர்வு (Camera movement) ஆகியன அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த கதாபாத்திரத்தின் காட்சியினுடைய தன்மையினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரால் ஒளிப்பதிவுசார் தொழில்நுட்ப விடயங்கள் நேர்மறையானவை, எதிர்மறையானவை என எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்ட திரைப்படங்களில் 'சித்திரம் பேசுதடி', 'சில்லுனு ஒரு காதல்', 'விருதகிரி', 'இராவணன்', 'வானம்', 'நர்த்தகி'. 'காஞ்சனா', 'ஆதிபகவன்', 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்', 'உன் சமையலறையில்', 'வாய்மை', 'இருமுகன்', 'பிச்சைக்காரன், 'தர்மதுரை' ஆகியன அங்க அசைவுகளைக் குறிவைத்து வெளிப்படுத்தும் நேர்மறையான ஒளிப்பதிவுசார் குறித்த தொழில்நுட்ப விடயங்களை அதிகமாகவும், 'ஈ', 'பருத்திவீரன்', 'தெனாவெட்டு', 'ஐ', ஆகியன

அசைவுகளைக் குறிவைத்து வெளிப்படுத்தும் எதிர்மறையான ஒளிப்பதிவுசார் குறித்த தொழில்நுட்ப விடயங்களை அதிகமாகவும் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில், ஒளிப்பதிவு சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் நேர்மறையான பிரதிநிதித்துவத்தை 78% திரைப்படங்களும் எதிர்மறையான பிரதிநிதித்துவத்தை 22% திரைப்படங்களும் கொண்டிருந்தமை கண்டறியப் பட்டது.

### III. ஆய்வு முடிவுகள்

எண்சார் மற்றும் பெறுதிசார் ஆய்வுகளின் அடிப்படையில் ஒப்பீட்டு ரீதியிலான முடிவுகளாக 'தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள்: பிரதிநிதித்துவம் குறித்த ஓர் பார்வை' தொடர்பில் மாதிரிகளாக எடுத்துக் கொள்ளப்பட்ட திரைப்படங்களில் வசனங்கள், பின்னணியிசை, ஒளிப்பதிவுசார் தொழில்நுட்ப விடயங்கள், நடத்தை வெளிப்பாடுகள் ஆகியவற்றினூடாக திருநங்கைகள் நேர்மறையானதாகவும், காட்சிகளின் எண்ணிக்கை, கதாபாத்திரங்களின் வகிபாகம், ஆடையமைப்பின் தன்மை, உடல்மொழி வெளிப்பாடுகள், குறியீடுகள் ஆகியவற்றினூடாக எதிர்மறையானதாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர்.

எனவே, மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட திரைப்படங்களின் உள்ளடக்கங்களைப் பொறுத்து அதிகளவிலானவை திருநங்கைகள் தொடர்பில் எதிர்மறையான பிரதிநிதித்துவத்தையே கொண்டுள்ளன. இத்திரைப்படங்கள் திருநங்கைக் கதாபாத்திரத்தினை கொண்டிருந்தாலும் கதாபாத்திர வகிபாகம், வசனங்கள், உடல்மொழி வெளிப்பாடுகள், ஆடையமைப்பின் தன்மை, குறியீட்டியல் சார்ந்த ஏதோவொரு தன்மையினூடாக எதிர்மறையான பிரதிநிதித்துவத்தையே அதிகமான திரைப்படங்கள் காண்பித்தும் பேசியுமிருக்கின்றன.

அதேவேளை, வசனங்களினூடாக வெளிப்படுத் தப்படும் பிரதிநிதித்துவம், நடத்தை வெளிப்பாடுகள், பின்னணியிசை, ஒளிப்பதிவுசார் தொழில்நுட்பங்கள் ஆகியவை ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் திருநங்கை கதாபாத்திரங்களை நேர்மறையானதாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளமை ஆய்வாளரால் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கைகள் குறித்த பிரதிநிதித்துவங்களாக இனங்காணப்பட்டவற்றில் ஐந்து விடயங்களில் எதிர்மறையானதாகவும் நான்கு விடயங்கள் நேர்மறையானதாகவும் ஆய்வின் இறுதியில் கண்டறியப்பட்டன. ஆகவே, ஆய்வாளரால் தெரிவு செய்த தலைப்பிற்கேற்ப முன்வைக்கப்பட்ட கருதுகோளானது இந்தவகையில் பகுதியளவில் மெய்ப்பிக்கப்பட்டது.

### எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள்

மேற்குறித்த ஆய்வின் எல்லையாக 2006 – 2016 வரையான ஆண்டுகளைத் தேர்வு செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதனால் அதற்கு முன்னரான காலப்பகுதிகளும் இணைக்கப்பட்டு ஆய்வு எல்லை விரிவுபடுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் திருநங்கைகள் குறித்த சித்திரிப்புக்களை கால வளர்ச்சியுடன் ஆராய்ந்தறியும் சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும்.

மேற்குறித்த ஆய்வில் திருநம்பிகள் குறித்த சித்திரிப்புக்கள் தொடர்பில் ஆய்வாளரால் ஆராயப்படவில்லை. எனவே, எதிர்வரும் காலங்களில் திருநங்கைகளை மட்டுமன்றி திருநம்பிகளும் ஆய்விற்குள் உள்வாங்கப்படலாம்.

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் 'திருநங்கைகள்' என்ற கதாபாத்திரம் இடம்பெற்ற திரைப்படங்கள் மாத்திரமே மேற்குறித்த ஆய்வில் ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டன. திரைப்படங்களில் திருநங்கைகள் கதாபாத்திரம் இடம்பெறாது அவர்கள் குறித்த பிரதிநித்துவம் வேறு கதாபாத்திரங்களது வசனங்களினூடாகவோ, நடன அசைவுகளினூடாகவோ, நகைச்சுவையினூடாகவோ வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம். எனவே, இனிவரும் காலங்களில் இவ்விடயம் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுப்பவர் இத்தகைய திரைப்படங்களையும், உள்ளடக்கி ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

### உசாத்துணை

1. ஈழநிலா, "மூன்றாம் பாலின் முகம்". செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், தமிழ்நாடு, இந்தியா, 2016.
2. நிருசா.பா., 'மாற்றுப்பாலினரின் சுயமதிப்பீடு மற்றும் பால்மாற்றம் தொடர்பாக சமூகத்தில் காணப்படும் வெறுப்பினை அளவிடுதல் தொடர்பான இணைவு ஆய்வு', பதிப்பிக்கப்படாத சிறப்புக் கலைமாணி ஆய்வேடு, சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2016.
3. ராஜநாயகம். ச,, "குடும்ப உறவில் கனவுத்திரை", வைகறை, திண்டுக்கல், இந்தியா, 2002.